முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு சப்-சென்டர் இருக்கிறது. மலைப் பகுதியாக இருந்தால் 3 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு சப்-சென்டர் வீதம் இப்போது வைத்து நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால், கேம்ப் நடத்துவதைப் பற்றி ஏற்கெனவே நம் புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டத்தின் கீழ் கேம்ப்களை நடத்தி இருக்கிறோம். ஆனால், மாதா மாதம் அங்கே நடத்த முடியுமா என்று தெரியவில்லை. எனவே, இப்படி ஒதுக்குப்புறமாக இருக்கிற இடத்திற்கு மரச்சினை இல்லாமல் என்ன வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்று கருதி, அதுபற்றி தனியாக ஆய்வு செய்து, அதுபோன்ற இடங்களில் என்ன வசதிகளை கொடுக்க முடியும் என்பதைப்பற்றி தனியாக முடிவு எடுக்கலாம் என்பதைப் பற்றி ஏற்கெனவே நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களின் நலன் கருதி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதை ஆய்வு செய்யலாம் என்று. தற்போது அரசு வழங்கியுள்ள சிறப்பு தாய் சேய் நல சிறப்பு முகாம்கள் நடத்த இருப்பதால் இப்படிப்பட்ட சிறப்பு முகாம்களை மேட்டூர் தொகுதியில் பாலமலையில் அரசு முன்னுரிமை கொடுத்து நடத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட தலைமை ஏற்று நடத்தினால் அரசாங்கம் மகிழ்ச்சி அடையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு ம. சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

106—

கரூர்-சேலம் அகல இரயில் பாதை அமைக்கும் பணி.

(*11210— திரு. ம. சின்னசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்-சேலம் அகல இரயில் பாதை அமைக்கும் பணியை துரிதப்படுத்த அரசு மைய அரசினை கோரியுள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS

(ஆ) அப்படி அமைக்கப்பட இருக்கும் அகல இரயில் பாதையில் வாங்கல்-மோகனூர் இடையில் காவிரி ஆற்றில் குறுக்கே Rail—cum—Road Bridge அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தென்னக இரயில்வே அளித்த சர்வே அறிக்கையில் இரயில் பாலம் அமைப்பது பற்றி மட்டுமே கூறப்பட்டுள்ளது.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர்-சேலம் அகல ரயில் பாதை என்பது கரூர் தூத்துக்குடி அகல ரயில் பாதையின் இரண்டாவது கட்டம் இப்போது கரூர்-தூத்துக்குடி பாதை அனேகமாக முடியும் தருவாயில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மதுரையிலிருந்து கரூர் வழியாக சென்னைக்கும், பெங்களூருக்கும் ரயில் விடுவதற்கு கூட உத்தேசம் இருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, இந்த கரூர்-சேலம் அகல ரயில் பாதை அமைத்தால் தான் ஏறத்தாழ 40 கிலோ மீட்டர் தூரமும் குறையும், அதுமட்டுமல்லாமல் 2 1/2 மணி நேரம் நமக்கு பயண நேரமும் மிச்சமாகும். இந்தப் பாதை அமைப்பதற்கு சர்வே எல்லாம் 7 ஆண்டுகளுக்கு முன்பே எடுத்தார்கள். அதற்குப் பிறகு எந்த நடவடிக்கையும் இல்லை. ஆகவே, இதை துரிதப்படுத்துவதற்கு மாநில அரசு மத்திய அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31—12—1986-ல் தென்னக ரயில்வே சார்பாக இந்த ரயில் பாதையினுடைய மொத்த நீளம் 85 கிலோ மீட்டர். 62 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயாரித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தார்கள். மத்திய அரசு நிதி இல்லாத காரணத்தால் அதை ஒத்திப் போட்டுக்கொண்டே வருகிறார்கள். நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் மத்திய அரசின் அமைச்சர்களை சந்திக்கின்ற நேரங்களில் எல்லாம் இந்த கருத்துக்களை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்,

அரசின் சார்பாக 3—12—1992 அன்று மீண்டும் ரயில்வே அமைச்சர் அவர்களுக்கு கடிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதை துரிதப்படுத்த வேண்டும் என்றும், எதிர்காலத்திலாவது இதை விரைந்து செயற்படுத்த வேண்டுமென்றும் அரசு வலியுறுத்திக்கொண்டிருக்கிறது.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு திட்டம் இதற்குப் பின்னால் தொடங்கப்பட்ட திட்டத்தை மத்திய அமைச்சராக இருந்த திரு. ஜார்ஜ் பெர்னாண்டெஸ் அவர்கள் கொங்கன் கார்ப்பரேஷன் என்று ஒரு கார்ப்பரேஷன் அமைத்து இப்போது மைசூர் மாநிலத்திலே அந்தத் திட்டத்திற்கான வேலைகள் எல்லாம் விரைவாக தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அது போன்று இதற்கும் ஒரு கார்ப்பரேஷன் அமைப்பதற்கு கூட மாநில அரசு ஏற்பாடு செய்தால் நிதி கிடைப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, இதுமட்டுமல்லாமல், இன்னும் பல்வேறு ரயில்வே திட்டங்கள் நம்முடைய மாநிலத்திலே அநேகமாக அமைப்பதாக அறிகிறேன். அதற்கும் அது உதவியாக இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய ஆட்சியில் இருந்த மத்திய அரசு வேறு. இப்போது ஆட்சியில் இருக்கிற மத்திய அரசு வேறு. அதுபோன்ற உங்களுடைய கருத்துக்களை வலியுறுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியிலிருந்து பெங்களூர் வரை இணைக்கக்கூடிய என். எச். 7 வழிப் பாதையிலே கரூரிலிருந்து சேலத்திற்கு வருவது வேலூர் பாலத்தின் வழியாக வருவதை விட வாங்கல்—மோகனூர் இடையிலே காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டினால் கிட்டத்தட்ட 40 கிலோ மீட்டர் தூரம் குறைகிறது. மோகனூர் சர்க்கரை ஆலையிலிருந்து புகலூர் பேப்பர் மில்லுக்கு கச்சாப் பொருட்கள் கொண்டு செல்வது லாரிகள் மிகுந்த நாமக்கல்லிலிருந்து தினந்தோறும் 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட லாரிகள் செல்வதும், கோடிக்கணக்கான மூட்டைகள் ஏற்றுமதியாவதும் மிக சிரமத்திற்குஉள்ளாகி வேலூர் பாலத்தில் அடிக்கடி விபத்துக்கள் நடை

பெறுகின்றன. எனவே மத்திய அரசு அந்த ரயில்வே பாலத்தை ஏற்படுத்துகின்ற கால கட்டத்தில் தமிழக அரசும் இணைந்து வாங்கல்—மோகனூர் இடையில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன் வருமா என்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூரில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவது என்பது, ரயில்வே பாலம் கட்டு வதற்கு மட்டுந்தான் அவர்கள் சர்வே எடுத்து இருக்கிறார்கள். அது குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே தனிக் கேள்வி போட்டால் அதற்கு அவர்கள் விளக்கங்களைத் தருவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்சாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் இதேபோல் மேட்டுப்பாளையத்திலிருந்து பவானிசாகர் வழியாக சத்திய மங்கலம் கோபி வரை ஒரு ரயில் பாதை அமைப்பதற்கான திட்டம் இருப்பதாக, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் பேசி இருக்கின்றார்கள். ஆகவே அது குறித்து நமது அரசு மத்திய அரசிடம் கேட்டுள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் வாக்கு கேட்கிறபோதெல்லாம் அந்த வாக்குறுதியைத் தந்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அது இதுவரையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 107 திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை.